விசாரணைக் காலம் முடிந்து திரும்பவும் அதே இடத்தில் வேலை கொடுத்தால், அதே குற்றத்தை அவர்கள் செய்ய வாய்ப்பு இருக்கும். அந்த அளவில் சிறை அதிகாரிகளுக்குக் கைதிகள் பொறுப்பு இல்லாமல், அரசின் வேறு இலாகாவில், வேறு பொறுப்பிலே அவர்களை அமர்த்துவது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அந்த அதிகாரிகள் கிட்டத்தட்ட சிறைகளிலேதான் பணி ஆற்றுபவர்கள். மேல் அதிகாரிகளுக்கு அந்தப் பணி தான் அதிகமாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சிறையிலேதான் அந்தத் தவறுகள் நடந்திருக்கின்றன. இப்போது வேறு சிறிய சிறையிலேதான் அவர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். பொறுப்பு குறைவாக இருக்கின்ற இடத்திலே, அந்த அடிப்படையிலேதான் மாற்றிப் போடப்படுகிறார்கள். அந்த அளவில் இந்தமாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

THIRU A. R. DAMODARAN : Sir, the Government Order stipulating that the enquiry must be completed within six months may result in some enquiries being delayed so that the man may be reinstated in service. There are certain implications like that. May I request the Government to consider whether these enquiries could be made under some Special Court procedure or whether the Government could have some Government officers specially to conduct all these enquiries, because an element of doubt is likely to creep in? Is there any other Law Agency which could conduct these enquiries from the point of view of the Government ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதற்கு என்று தனியாக 'லா ஏஜென்சி' ஒன்று அமைப்பதன் மூலமாக அந்த விசாரணையில் ஏற்படும் கால தாமதத்தைக் குறைக்க முடியும் என்று அரசு கருதவில்லை. இதுபோன்ற விசாரணைகளை போர்டு மெம்பர் போன்ற உயர்தர அதிகாரிகள் நடத்துகின்றார்கள். இதிலே கால தாமதத்திற்குக் காரணம் 'என்குயரி ஆபீசர்கள்' என்று சொல்ல முடியாது. ஆகவே இதற்காக என்று தனியாக ஒரு 'லா ஏஜென்சி' தேவையில்லை என்று கருதுகிறேன்.

சிறையில் இறந்த கைதிகள்.

* 159. **வினா—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 15—7—1977 முதல் 14—7—1980 வரை, சிறையில் இருக்கும் போது இறந்த கைதிகள் எத்தனை பேர் ;

(இ) அவர்கள் எந்தெந்த சிறைகளில் இறந்தார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 193 பேர்கள்.

(இ) மத்திய சிறை, சேலம்	9
மாநில மகளிர் சிறை, வேலூர்	1
மத்திய சிறை, பாளையங்கோட்டை	12
மத்திய சிறை, வேலூர்	13
மத்திய சிறை, மதுரை	35
மத்திய சிறை, கடலூர்	7
மத்திய சிறை, சென்னை	28
மத்திய சிறை, திருச்சி	20
மத்திய சிறை, கோயம்புத்தூர்	47
கிளைச்சிறை மற்றும் தனிக்கிளைச் சிறைகள்	19
பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை	2
மொத்தம் ..	193

(முற்பகல் 10-00)

திரு. ம. சங்கரலிங்கம் : ஓராண்டில், சிறையில் இருக்கிற கைதிகளுள் 193 பேர்கள் இறந்திருக்கிறார்கள். மத்திய சிறையில் இறந்தவர்கள் அல்லாமல், விசாரணைக்குட்பட்டு சப்-ஜெயிலிலும், ஸ்டேஷனோடு இருக்கக்கூடிய கிளைச் சிறைகளிலும் இறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்பதை அறிய விரும்பு கிறேன். மேலும் இப்படி சிறைகளில் இறப்பவர்களின் எண்ணிக்கை ஏன் கூடிக் கொண்டிருக்கிறதென்பதை அரசு பரிசீலித்ததா ? அவர்களுக்கு சிறைகளில் இழைக்கப்படும் கொடுமைகளின் காரணமாக எத்தனை சதவிகிதம் கைதிகள் இறந்திருக்கிறார்களென்ற கணிப்பு செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் குறிப்பிடும்போது, ஓராண்டில் நடந்த இறப்புக்கள் என்று குறிப்பிடவில்லை. 15—7—1977-லிருந்து 14—7—1980 வரை சிறைகளில் இறப்புக்கள் எத்தனை என்றுதான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் வினா எழுப்பினார்கள். அதற்குத்தான் பதில் சொன்னேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : நான் கூறியதில், 'ஓராண்டு' என்பதற்குப் பதிலாக 'மூன்று ஆண்டுகள்' என்று மாற்றிக்கொள்ளவும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கிளைச் சிறைகளில் 19 பேர்கள் இறந்துள்ளார்களென்று சொன்னேன். 193 பேர்களில் 181 பேர்கள் நோயினால் இறந்திருக்கிறார்கள் என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. மீதமுள்ளவர்களில் 19 பேர்கள் தற்கொலையின் காரணமாகவும், ஒருவர் குத்தப்பட்டும் இறந்திருக்கிறார் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, am I to understand that these prisoners died of illness in the prison itself or in the hospital attached to the prisons, because normally when prisoners are ill, they are transferred to the hospital and they might die there? Have they died in the prison or in the hospitals ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இதில் பலர் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறுகின்றபோது இறந்திருக்கிறார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : சிறைச்சாலைகளில் சிலர் இறப்பதற்குக் காரணம், சில ஆபத்தான பொருள்கள் உள்ளே கொண்டு போகப்படுவதுதான் என்று சொல்லுகிறார்கள். சில வார்டர்கள் தவறாக நடந்துகொள்வதாகக் கருதுகிறார்கள். அதை உணர்ந்து அப்படிப்பட்ட வார்டர்களைக் கண்டுபிடித்து வேறு இடங்களுக்கு அவர்களை மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சிறைக்குள் கொண்டு செல்லக்கூடாத சில பொருள்கள் சில நேரங்களில் சிறைக்குள் சென்றுவிடுவதுமுண்டு. அவ்வப்போது சோதனையிட்டு, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுண்டு. அப்படி வேலூர் மத்திய சிறைச்சாலையிலும், சென்னை மத்திய சிறைச்சாலையிலும் சோதனையிட்டு, சிறைக்குள் எடுத்துக்கொண்டு செல்லக்கூடாத பொருள்களை எடுத்துக்கொண்டு சென்றதற்காக சம்பந்தப்பட்டவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். வார்டர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே தொடர்ந்து இல்லாமல் 6 மாதம் அல்லது ஓராண்டுக்குள் அவர்களை உட்பகுதியில் மற்ற இடங்களில் போடலாமென்ற கருத்தை அரசு பரிசீலித்து வருகிறது.

1981 மார்ச் 24]

திரு. ஜேப்பியார் : ஆயுள் கைதிகளாக சிறையில் இருந்து, வெளியே வருகிறவர்களின் வாழ்க்கையில் நல்ல காரியம் செய்யும் எண்ணத்தோடு, அரசுத் துறையிலோ, தனியார் துறையிலோ அவர்களை வேலையில் அமர்த்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியில் வருகிறவர்களுக்கு 'செல்ப்-எம்ப்ளாய்மென்ட் ஸ்கீம்' என்ற அடிப்படையில், அவர்கள் சுயமாகத் தொழில் துவக்க முன்வரும்போது, அதற்கான பயிற்சியை அவர்கள் சிறையில் மேற்கொண்டிருந்தால், அவர்களுக்குக் கடன் உதவி, சப்சிடி போன்றவற்றைக் கொடுத்து புனர் வாழ்வளிக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. அது நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகிறது.

திரு. ஆ. நல்லசிவன் : இறந்த 193 பேர்களில் 10 பேர்கள் தற்கொலை செய்து கொண்டார்களென்று கூறப்பட்டது. அப்படி தற்கொலை செய்து கொண்டவர்கள் சிறைகளில் இழைக்கப்பட்ட கொடுமைகளின் காரணமாக தற்கொலை செய்துகொண்டார்களென்ற முடிவிற்கு அரசு வருகிறதா அல்லது அதற்கு வேறு காரணங்கள் இருக்கின்றன என்ற முடிவிற்கு அரசு வருகிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்கொலை செய்துகொண்டவர்கள் உண்மையாகத் தற்கொலை செய்து கொண்டார்களா அல்லது கொடுமைகளின் விளைவாக இறந்தார்களா என்பது குறித்து ஆய்வு நடத்தி, தற்கொலை செய்துகொண்டார்களென்று முடிவு செய்யப்பட்டு, இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆஃப் பிரிசன்ஸ் அவர்கள் சொன்ன தகவலைத்தான் நான் தந்திருக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இறந்த கைதிகளில் எத்தனை பேர்கள் அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள்; எத்தனை பேர்கள் வேறு குற்றச் சாட்டுகளுக்காகக் கைது செய்யப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இறந்த கைதிகளின் எண்ணிக்கை 193 ஆக இருக்கிற காரணத்தால், இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டால், தகவல்களைத் தரலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : இறந்துபோன 193 கைதிகளின் குடும்ப நிலை இப்போது எப்படி இருக்கிறது ? அவர்கள் சிறைக் காலம் முடிந்து வெளியே வந்த பிறகு, உழைத்து அவர்கள் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டியவர்

களாக இருந்தவர்கள். அவர்கள் அரசின் பொறுப்பில்—சிறையில்—இருந்த போது இறந்ததால், வறுமையால் வாடும் அவர்களின் குடும்பங்களுக்கு ஏதாவது நிவாரண உதவி செய்யும் திட்டம் அரசிடம் இருக்கிறதா? அதுபற்றிப் பரிசிலனை செய்ததா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அரசு அலுவலர்களாக இருந்து, சிறைக்கு வந்து, அங்கே இறப்பார்களேயானால், அவர்களுக்கு அத்தகைய சலுகைகள் இருக்கின்றன. இவர்கள் அரசுப் பணியாளர்களாக இருந்துவிட்டு, சிறைக்கு வரவில்லை. அப்படி யாராவது வந்து, சிறையில் இறந்திருந்தால், அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்கும் அத்தனை சலுகைகளும் கிட்டும். பொது மக்களாக வந்துள்ளவர்களுக்கு அந்தச் சலுகைகள் கிட்டாது.

THIRU A. R. DAMODARAN: In the case of prisoners who die in prison or in hospital attached to prisons, will the Government consider the possibility of allowing the relations of the persons to nominate a private doctor of their choice to be present when the *post mortem* is conducted ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அரசினுடைய மருத்துவர்கள்மீது அரசுக்கு நம்பிக்கை இருக்கிறது. எனவே 'போஸ்ட் மார்ட்டம்' நடத்தும் போது, தனி மருத்துவர்களை, விதிமுறைப்படி அனுமதிப்பதில்லை. அது சாத்தியக்கூறாக இராது. அரசு மருத்துவர்களை நம்ப வேண்டும்.

திரு. ஜேப்பியார் : 6 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்குள் தண்டனை அடையும் நபர்களை சொந்த ஊரிலுள்ள சிறைகளில் வைக்காமல் வேறு. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி, சிறையில் மரணம் அடைந்தவர்களைப் பற்றியதாகும். இப்படியே கேள்விக்கு சம்பந்தமில்லாமல் கேட்டால், நிறைய கேள்விகள் வரும். . .

திரு. ஜேப்பியார் : ஊர்களுக்கு மாற்றுவதால், சிறைக்குள்ளே போகக் கூடாத பொருள்கள் போகாதவாறு தடுக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தலாம். அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கெனவே இருந்து வருகிற பிரச்சினை. அந்தந்த மாவட்டங்களிலே இருக்கின்ற கைதிகளை அண்டை மாவட்டங்களில் இருக்கின்ற கைதிகளையெல்லாம் மாவட்ட மத்திய சிறைகளிலேயே

1981 மார்ச் 24]

அடைக்க வேண்டும். மற்ற மாவட்ட சிறைக்குள் கொண்டு போகக்கூடா தென்று சொல்லி, கைதிகளிடையே அமைதியின்மை இருப்பதால், இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கலாமென்று அரசு பரிசீலித்து வருகிறது.

சூரியகாந்தி எண்ணெய்.

* 160. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) பனைமரம், சூரியகாந்தி ஆகியவற்றிலிருந்து எண்ணெய் தயாரிக் கும் தொழிற்சாலைகள் தமிழகத்தில் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், எத்தனை தொழிற்சாலைகள் எங்கெங்கு உள்ளன ?

(உ) வேறு எந்தெந்த தாவரங்களிலிருந்து எண்ணெய் தயாரிக்கப்படு கிறது ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) & (இ) தமிழகத்தில் பனை மரத்திலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலைகள் இல்லை. ஆனால் சூரியகாந்தி விதையிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஒன்று தர்மபுரி மாவட்டம், பூச்சம்பள்ளியில் உள்ளது.

(உ) நிலக்கடலை, தேங்காய், எள், ஆமணக்கு, பருத்திக்கொட்டை, வேப்பங்கொட்டை, முந்திரிக்கொட்டை, இலுப்பை முதலியவைகளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சூரியகாந்திப் பூவிலிருந்து எண்ணெய் எடுக்கக்கூடிய தொழிற்சாலை தர்மபுரியில் இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது இந்த எண்ணெய் மக்களால் பெரிதும் பயன் படுத்தக்கூடியதாக இருக்கிறது. எனவே பல மாவட்டங்களில் சூரியகாந்தியை உற்பத்தி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே எங்கெல்லாம் சூரிய காந்தி இப்போது அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறதோ, அந்த மாவட்டங் களிலெல்லாம் சூரியகாந்திப் பூவிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற் சாலையை அமைக்க அரசு பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : நான் ஏற்கெனவே சொன்ன ஆலை யைத் தவிர, கோவை மாவட்டத்தில் ஒண்டிப்புதூரில் 15,000 டன் சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி செய்யும் திறன்கொண்ட ஆலை ஒன்றும், தென்னாற்காடு மாவட்டத்தில் 10,000 டன் சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி செய்யும் திறன்